# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 துலை-நளி (10-11-1987) -நவ-87 85 காசுகள் (இதழ் எண்: 94)


# இராசீவ்காந்தி நோக்கம் தமிழர்களை அடியோடு அழித்து ஒழிப்பதே!

## இங்குள்ள பழனியாண்டி, செயகாந்தன், மூப்பன், சிதம்பரன்-களின் நோக்கம் அதற்குத் துணைபோவதே!

இராசீவ் காந்தியும் செயவர்த்தனேவும் ஒரே ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். இரண்டு பேர்களுக்கும் நேர் எதிரியினம் தமிழினமே! நேரு காலத்திலிருந்தே இந்தியாவில் ஆரிய இனத்திற்குத் தலையாய நேர் எதிரியினமாகத் தமிழினத்தைக் கருதும் உணர்வு படிப்படியாக மேலோங்கி வந்திருக்கிறதை வரலாற்றடிப்படையில் அரசியல், இன நோக்கு உடையவர்கள் நன்கு உணரமுடியும்.

தமிழீழப் போராட்டத்தை இந்திராகாந்தி ஒரு வாறுன இனவிடுதலைப் போராட்டம் என்று ஒப்புக் கொண்டிருந்தாலும், இலங்கையில் தமிழர்கள் சிங்கள அரசால் அழிக்கப் படுவதை நேரடியாகக் கண்டிக்கவோ தடுத்து நிறுத்தவோ முடியாமல் - விரும்பாமல் இருந்ததையும் எல்லாரும் அறிவர்.

இலங்கையில் தமிழர்கள் பெருவாரியாக அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் ஒருபுறத்தில் தமிழீழப் போராளிகளை ஊக்குவதுபோல் ஊக்கிக் கொண்டே, மறுபுறத்தில், செயவர்த்தனேவுக்கும் அவர் சார்பாளர்க்கும் இந்திராகாந்தி பலமுறை வரவேற்புக் கொடுத்தும் வாழ்த்துப் பாடிக்கொண்டுமே இருந்ததுடன், மறைமுகமாக அங்குத் தமிழர் அழிபடுவதையும் தூண்டிவிட்டுக் கொண்டு இருந்தார்.

இது தொடர்பாகவும், இன்னும் இந்திய மண்ணில், அசாம், பஞ்சாப், நாகாலந்து, திரிபுரா, தமிழ்நாடு முதலிய மாநிலங்களில் ஏற்பட்டுவரும் தேசிய இன எழுச்சிகளை அடக்கி ஒடுக்குவது தொடர்பாகவும், அரசுச் சார்பான முயற்சிகளை மிகுதியாக விளம்பரப் படுத்தவும், தேசிய இன முயற்சிகளின் ஞாயங்களையும் அவற்றின் போராட்டங்களையும் முறியடிக்கவும், அவற்றின் மேல் பொய், புளுகு முதலிய திரிபுக் கருத்துகளைப் பரப்பவும், அவற்றை வன்முறைப் போராட்டங்கள் என்று கருத்துப் பரப்பி மக்களிடை அவைமேல் வெறுப்புண்டாக்கவும், அரசின் தேசிய ஒருமைப்பாட்டில் விருப்புண்டாக்கவும், நாடு முழுதும் பரவலான கருத்துப் பரப்புதலுக் கேற்றவகையில், வானொலி, தொலைக்காட்சி வாய்ப்புகளை, இந்திராகாந்தி விரிவுபடுத்திக் கொண்டார்.

இனி, இந்திராகாந்திக்குப் பின், அவர் மகன் இராசீவும் தாய்போன வழியிலும், அதை விட இன்னும் மிகையாகச் செய்கின்ற முறையிலும், அரசுக் கருவிகளைத் தந்திரமாகவும், தமக்கே உரிய வகையிலும் ஆழமும் அகலமும் படுத்திக் கொண்டார். அத்துடன் நில்லாது, இந்திரா கையாண்ட அதே

(தொடர்ச்சி 4-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# எங்கள் கருத்துகள்!

## உ.த.மு.க. கிளைகளை நாடு முழுதும் அமையுங்கள்!

அன்பு கனிந்த அய்யா! வணக்கம்!

தாங்கள் மணவைக்கு வந்திருந்து இரண்டு நாள்கள் எங்களுடனே உண்டு, உறங்கிக் களிப்புற உரை நிகழ்த்திச் சிறப்புச் செய்ததை என்னுலும், எம்மைச் சார்ந்துள்ள நல் நண்பர்களாலும் எந்நாளும் மறக்க இயலாது.

துவரங்குறிச்சிக் கூட்டம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. தங்களின் உரைப் பொழிவு யாவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் சீராக அமைந்து, சிற்றூர்ப்புற மக்களை விழித்தெழச் செய்தது.

நாட்டின் நிலையும், ஆட்சியாளர்களின் மாட்சிமையற்ற செயலும், அதனுல் மக்கள் படும் துன்பமும் குறித்து நெடியதொரு விளக்கவுரை நிகழ்த்தியது நெஞ்சில் நீங்காமல் நிற்கிறது.

இறுதியாக உ. த. மு. க வின் வட்டத்தலைவர் கரடிபட்டி கண்ணன் அவர்கள் தளைப்படுத்தப்பட்டார் என்ற செய்தி மிகவும் வருத்தம் நல்கியது. சிற்றூர்ப்புற மக்கள் காவலர் என்ருலும். காக்கிச்சட்டை என்ருலும், அஞ்சி நடுங்கும் நிலையில் உள்ள அம் மக்கள் பலரும் பலவாருகப் பேசலுற்றனர். உண்மை நிலையை, உண்மையாளர்களை, நாட்டுக்கும், மொழிக்கும், இனத்துக்கும் தொண்டாற்றும் தங்களைப் போன்ற தூயவர்களைக் கண்டு கொள்ளாது, போலிகளைக் கண்டு மயங்கும் செம்மறி ஆடுகளாய் நாட்டு மக்கள் மாறி வருகின்றனர். இந்நிலையை மாற்ற அய்யா அவர்கள் பல ஆண்டுகளாகச் சொல்லி வந்தாலும் மக்களுக்கு இது செவிடன் காதில் ஊதிய சங்கு போலவே ஆகி விட்டது. உ. த. மு. க. கிளைகளை நாடு முழுவதும் அமைக்க ஆவன செய்ய வேண்டும். செயல் மிக்க பொறுப்பாளர்களைக் கொண்டு செயலாற்றச் செய்ய வேண்டும். தங்களின் நற்பணிக்கு எனது சிறு தொண்டு என்றும் உண்டுஎன்று உறுதி கூறுகின்றேன். மணப்பாறை வட்டத்தில் செயலாற்றும் தொண்டர்கள் மிகக் குறைவு, முன் வரும் குறைந்த நண்பர்களிலும் சமயத்திற்கேற்ப நடந்து கொள்வோர்களே உண்டு. புலவர் திருக்குறள் நாவை சிவம் க. மு. அவர்கள், சிறந்த தென்மொழிப்பற்ருளர், தென்மொழிக்கே தம்மை ஈந்தவர். எழுத்தாலும், பேச்சாலும் தென்மொழிக் கொள்கையையே தூய தமிழில் பேசுபவர். எங்களுக்குச் சிறந்த ஆசிரியராகவும். வழிகாட்டியாகவும் விளங்குகிருர். அவர்களை நீங்கள் உ. த. மு. க-வின் தகுதி வாய்ந்த பொறுப்பாளராக ஆக்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன். அவரின் பணிக்குத் துணை நிற்கவும் என்றும் அணியமாக உள்ளேன். தங்களின் உடல் நலம் பேணவும், பல்லாண்டு வாழ்ந்து இனம், மொழி, நாட்டைக் காத்திட தமிழன்னை அருள்வாளாக! அன்புள்ள, தென்மொழித் தொண்டன், பாவலர், தாழை

நா. இளவழகன். மணவை.

## என்னைப் போன்ற நெஞ்சங்கள்.. !

அன்பின் ஆசானுக்கு உங்கள் அடிப்பொடி விடுக்கும் மடல். நலம். நாடுவதும் நலமே. சென்ற சில கிழமைகளாகத் 'தமிழ்நிலம்' இதழ் வராதது கண்டு மிகவும் வருந்துகின்ருேம். என்னைப் போன்ற எத்தனையோ நெஞ்சங்கள் வாடும் என்பது எனக்குத் தெரியும். இருப்பினும் இதழ்கள் தொடர்ந்து கிடைக்கும்படி செய்யவும். மேலும் எங்கள் கல்லூரியில் நாட்டு நலப் பணித்திட்டத்தின் சார்பாகக் கல்லூரிப் பேச்சுப்போட்டி நடைபெற்றது. கல்லூரியில் நான் தங்களின் பாடல்களில் சில மேற்கோள்கள் காட்டிப் பேச நேர்ந்தது. பள்ளிப்பறவைகளில் 'தூங்கி இருந்தது போதும் எழு தமிழ்த் தம்பியே'... என்று கூறிப் பேசத்தொடங்கியதும் எண்ணற்ற தமிழ் நூல்களைக் கற்றறிந்த பேராசிரியர்கள் இப்பாடலினைக் கேட்டு மகிழ்ந்தார்கள். அனைவரிடமும் என்னிடம் உள்ள தமிழ்ச்சிட்டு, பள்ளி பறவைகள், கனிச்சாறு போன்ற நூல்களைக் கொடுத்துப் படிக்கச் செய்து வருகிறேன். தமிழ்ப்பாடலுக்கு உள்ள உயர்வையும், மகிழ்ச்சியையும் எண்ணி என் மனம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது. போட்டியில் நானே முதல் பரிசையும் பெற்றேன் என்பதை அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

—மு. இளங்கோவன்,
திருப்பனந்தாள்.

## எவ்வகை விளம்பரமும் இல்லாமல்...!

மதிப்புக்குரிய ஆசிரியர் அவர்களுக்கு!

முதலில் எமது புரட்சிகர செவ்வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்ருேம். எமது அறிக்கையை தங்கள் இதழில் வெளியிட்டமைக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ருேம். தொடர்ந்தும் இதேபோன்ற எமது அறிக்கைகளை வெளியீடுவீர்கள் என நம்புகிருேம். எவ்வகை விளம்பரமும் இல்லாமல் முழுக்க முழுக்க கொள்கை பரப்புதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு உங்கள் இதழ் வெளிவருவதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்ருேம். எவ்வகைத் துன்பங்கள், இடையூறுகள் வந்தாலும் எல்லாவற்றையும் தாண்டித் தொடர்ந்து இதேபோல் வெளிவர வேண்டும் என்று விரும்புகிருேம். உங்கள் வெற்றிக்கு எமது வாழ்த்துகள்.

—இலங்கை-இந்திய மக்கள் நட்புறவுக் கழகம்

## முட்டாள் தனமான ஒன்று!

அன்புடைய ஐயா,

வணக்கம். நான் தங்களுக்கு எழு

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர்
# திரு. உமாமகேசுவரன் (முகுந்தன்)
## இன்றைய சூழலில் என்ன கருதுகிறார்?

(அண்மையில் திரு. முகுந்தன், இலங்கை, மன்னாரிலிருந்து நமக்கு எழுதியுள்ள மடல்.)

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கட்கு, அன்புடையீர்,

இன்று இலங்கைத் தமிழர்களுக்கு நடக்கும் இன்னல்களை ஓர் அளவு தாங்கள் வானொலி மூலமும், செய்தித்தாள் மூலமும் அறிந்து கொண்டிருப்பீர்கள் என எண்ணுகின்றேன். இன்று இந்திய அரசு விடுதலைப் புலிகள் மேல் தொடுத்திருக்கும் தாக்குதல், இலங்கைப் போர்ப்படை கடந்த காலத்தில் தாக்கியதை விட மிகக் கொடுமையானதாகும். மிகப் பெருமளவிலான தகரி(பீரங்கி)கள், 155 எம். எம். தகரி(பீரங்கி)கள், 120 எம். எம். 'மோர்ட்டார்கள்' (MORTORS) கனவகை இயந்திரத் துமுக்கிகள், இறகூர்தித் (Helicopter) தாக்குதல்கள் அனைத்தையும் மேற்கொண்டுள்ளது. இத்தாக்குதலில் புலிகள் படையினரை விட பொதுமக்களும், வீடுகளும், பொதுச் சொத்துகளுமே கூடுதலாக அழிக்கப்பட்டு வருகின்றன. ஒப்புரவு (சமாதானம்) என்றபோர்வையில் இலங்கை படிப் படியாகக் கவரப்(ஆக்கிரமிக்கப்)படுகின்றது. இந்திய அரசு தன்னை ஞாயப் படுத்திக் கொள்வதற்குக் கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் விடுதலைப் புலிகள் விட்டுக் கொண்டிருக்கின்ற பாரிய இன அழிவுக் (பாசிசக்) கொள்கையின் தன்மைகளேயாகும். புலிகள் கடந்த காலத்தில் அனைத்து இயக்கங்களையும் கொலை செய்ததனையும், ஏதுமறியாச் சிங்கள மக்களைக் காட்டுமிராண்டித் தனமாகக் கொலை செய்ததனையும் தற்போதைய தாக்குதலுக்கு அடித் துணையாக இந்திய அரசு பயன்படுத்திக் கொள்கின்றது.

விடுதலைப் புலிகள் தவறான போராட்டங்கள், ஐநூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுப் போராளிகளையும் அதன் தலைமைகளையும் அழித்தமை, மக்களை மிரட்டி வரி என்றபோர்வையில் கொள்ளையடித்தமை, ஆயிரக்கணக்கில் ஒன்றுமறியாச் சிங்கள மக்களைக் கொலை செய்தமை, இந்திய அரசின் உதவியுடன் முடி சூட்டிக் கொள்ள ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு இடைக்கால ஆட்சிக்குத் தமது போர்ச் செல்வர்களை (War Lords) அமைத்தமை ஆகிய அரசியல் தெளிவற்ற நடவடிக்கைகளே இன்றைய நிலைக்குக் காரணமாகும். விடுதலைப் புலிகள் இன்றும் இவற்றை உணர்ந்து கொண்டதாகவும், திருத்திக் கொண்டதாகவும் இல்லை. **இருப்பினும் இந்தியப் படையினரின் தாக்குதல்களை நாம் ஆதரிக்க முடியாது.** இந்தியப் படையினர் புலிகளின்மேல் நடத்தும் இத் தாக்குதல்கள் மக்கள் நாயக ஆற்றல்களையும், தேசப்பற்றுள்ள ஆற்றல்களையும், தமிழ்ப் போராளிகள் அனைவரையும் காலப்போக்கில் அழிப்பதற்கான ஒரு செய்முறைத் தாக்குதலாகவே நாம் பார்க்கின்றோம்.

எனவே இந்தியப் படையின் இத் தாக்குதல்களை (புலிகளின்மேல்) உடனடியாக நிறுத்த வேண்டும் என அறை கூவல் விடுகின்றோம்.

வறிய நாடுகளின் மேலும், விடுதலை இயக்கங்களின்மேலும் வன்கவர்புகளை மேலாளுமை நாடுகள் செய்யும் பொழுது குரல் கொடுக்கும் உ. த. மு. க, தி. மு. க, மற்றும் இடது சாரிகளும் இன்று வாய் மூடி நிற்பது எமக்கு அதிர்ச்சியைத் தருகின்றது. தென் ஆப்பிரிக்கா, நமிபியா, பாலத்தீனம், குவாத்தமாலா, எல்சல்வடோர் போன்ற நாடுகளின்மேல் வன்கவர்தல் செய்யும் வல்லரசியங்களையும், சியோனிசக் கொள்கையாளர்களையும் எதிர்த்துக் கண்டனமும், ஊர்வலமும் நடத்தும் இந்திய இடதுசாரிகளும், குடியரசுவாதிகளும் இலங்கையின் மேல் இந்தியா நடாத்தியுள்ள வன்கவர்பை (ஆக்கிரமிப்பை)க் கண்டிக்காமல் இருக்கின்றனர்.

இந்தியா தன் நலன்களைக் காப்பாற்றும் நோக்கில் இலங்கையில் படைகளைக் குவித்துள்ளது. **எனவே இந்தியாவின் நலன் இந்தியர்களின் நலன் என உ.த.மு.க.வும், தி. மு. க. வும் இருக்கின்றனவா? இலங்கை மக்களின் உழைப்பைச் சுரண்டி இந்திய மக்களை இந்திய அரசு வாழ வைக்கும் என இந்தியர்கள் கருதுவார்களேயானால் அக்கருத்துத் தவறானதாகும்.** மாறாக இலங்கையில் இந்தியப் படையின் இணைப்புகளையும், படைத் தளவாடச் தேசங்களையும் ஈடுகட்ட, இந்தியமக்களே இந்தியஅரசினால் சுரண்டப்பட்டுப் பொருளியல் நசுக்கலுக்குட்படுத்தப் படுவார்கள்.

எனவே தாங்கள் இந்தியப் படையின் நடவடிக்கைகளுக் கெதிராக (புலிகளின் மேல் எடுக்கும்) குரல் கொடுப்பதுடன், கலைஞரையும் தாங்கள் நேரில் சந்தித்து நிலைமையை விளக்கி இந்தியப் படைத்துறை நடவடிக்கைகளைக் கட்டுதிட்டங்கள் இன்றி நிறுத்துதற்குப் போராட்டம் நடாத்துமாறு கேட்டுக் கொள்ளவும்.

மன்னார்
13-10-1987.

இவ்வண்ணம், தங்கள் அன்புள்ள
க. முகுந்தன்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பிரித்தாளும் தந்திரத்தைத் தமிழீழ விடுதலைக் குழுக்களிடம் பயன்படுத்தி, அவர்களுக்கிடையில், உளவுப் படைகள் மூலமாக, வெளிப்படையாகவும் நிலையாகவும் பிளவுகளை உண்டாக்கி, அவர்களை ஒருவரால் ஒருவர் அழிபடவும் செய்தார். ஒன்று பட்டு விடாமல் இருக்கவும் பார்த்துக் கொண்டார்.

ஆக, இந்திய அரசால், தமிழீழப் போராளிகள், தங்களுக்குத் தாங்களாகவே, எதிர்த்து நின்றும், சிங்களவர்களாலும், உளவுப் படைகளாலும் சிறிது சிறிதாகச் சிதைக்கவும் அழிக்கவும் பட்டனர்.

இதற்கெல்லாம் தலையாய காரணம் தமிழர்கள் தமிழீழத்திலோ, அதன் பின்னர் தமிழ்நாட்டிலோ ஆட்சி உரிமையோ, விடுதலையோ பெற்றுவிடக் கூடாது என்று இராசீவ் ஆரியக் கும்பல் உறுதியாக எண்ணியதே ஆகும். அவ்வாறு தமிழர்கள் இந்தியாவிலோ, அல்லது இலங்கையிலோ ஆளும் உரிமை பெற்றுவிட்டால், இந்தியாவில் ஆரியப் பார்ப்பனரின் ஒட்டுமொத்த அதிகாரத்திற்குச் சரிவு ஏற்பட்டு விடும் என்று அவர்கள் அஞ்சுவதே காரணம். இந்த இனவியல் அடிப்படைக் காரணத்தை இங்குள்ள அரசியல், பொருளியல் கட்சிகள் நன்ருகவும், முழுமையாகவும். விளங்கிகொள்ள வியலாது; வெளிப்படையாகச் சொன்னுல் விளங்கிக் கொள்ளவும் விரும்புவதில்லை. அதற்குக் காரணமாக இருப்பதும் தமிழர்களைப் பற்றி அவர்களுக்குள்ள ஒரு மதிப்பீட்டுக் குறைவுதான்.

(இந்த அடிப்படையான உண்மைகளை உணராதவர்கள் தமிழீழத்தின் போராட்ட நிலைகளில் இந்தியாவின் தலையீட்டை அவரவர்களுக்குத் தெரிந்த சிற்சில வெளிப்படையான காரணங்களைக் கற்பித்துக் கொண்டு பற்பலவாறு மதிப்பிட்டுப் பேசிக் கொண்டிருக்கின்றதை நாம் பார்த்து வருந்தியிருக்கின்ருேம். ஆனுல் என்ன செய்வது? காலந் தான் அவர்களுக்கு இவ்வகையில் ஒரு தெளிவை உண்டாக்க வேண்டும்.)

அதனுல்தான், பாலத்தீன விடுதலை இயக்கத்தை ஏற்கும் — யாசீர் அராபத்துக்கு அடிக்கடியும், பல சிறப்புகளுடனும் வரவேற்புக் கொடுக்கும் இராசீவ்காந்தி, தமிழீழ விடுதலையை ஏற்க மறுக்கிருர். இவர்களின் போராட்டத்தை வன்முறை என்கிருர்.

இன்னும் வெளிப்படையாகச் சொல்வதானுல், அவர் நமிபியா விடுதலை இயக்கத்தை வரவேற்பதும், தென்னுப்பிரிக்காவில் வெள்ளையரின் இனவெறிக் கொள்கையைக் கண்டிப்பதும், தாய்லாந்து புரட்சிக்கு உடனடியாக ஆதரவு தெரிவித்ததும், அவரை உலக அரசியல் அரங்கில் உயர்த்திக் கொள்ளும் கரவான நடவடிக்கைகளே!

இல்லெனில் தமிழீழப் போராளிகள் தமிழீழக் கோரிக்கையை என்றுமே - இத்தனையாயிரம் தமிழர்களின் சாவுக்குப் பின்னரும் எதிர்த்துக் கொண்டிருப்பாரா, இராசீவ்காந்தி? அத்துடன் நில்லாது அவர்களின் உண்மையான வீரதீரமான விடுதலைப் போராட்டத்தையும், அவர்களையும் வன்முறை, என்றும், தீய ஆற்றல்(சக்தி)கள் என்றும் கொச்சையும் அவமானமும் படுத்திப் பேசுவாரா? இல்லை, உலகிலேயே இன்றுவரை பிறந்த எந்த அரசியல் கொடியவனையும் நல்லவனுக்கி விடுகின்ற அளவுக்கு மக்கள் அழிவை உண்டாக்கிக் கொண்டிருக்கும் செயவர்த்தனேவுக்கு வெளிப்படையான ஆதரவும் மறைமுகமான ஊக்கமும் கொடுத்துக் கொண்டிருப்பாரா?

*1983*-இலேயே கடுமையாகி விட்ட தமிழீழப் போரை, பலநூற்றுக் கணக்கான தமிழர் அழிவுக்குப் பின்னரும் 1985 வரை இழுத்து நீட்டிச்சச் செய்து, திம்புப் பேச்சைத் தொடங்குவாரா? இனி, திம்புப் பேச்சிலேயே போராளிகளின் ஒரே நோக்கைத் தெளிவாகக் கண்டு கொண்ட இராசீவ் 1987 வரை, அந்தப் பேச்சு, இந்தப் பேச்சு, அந்தத் தூதுவன், இந்தத் தூதுவன் - என்று இழுத்து இழுத்துக் காலத்தைக் கடத்தி — இவ் விடைக் காலத்தில் செயவர்த்தனு வலிவடையவும், போராளிகள் மெலிவடையவும் செய்து, 1987 இறுதியில், செயவர்த்தனுவையும் ஓரங்கட்டிவிட்டு, இந்தியப் படைகளை இலங்கை அனுப்பி, யாழ்ப்பாணத்தைத் தாம் கையகப்படுத்தவும், புலிகளை அழிக்க முற்படவும் நேரடியாகப் போர் தொடுப்பாரா?

ஆப்பிரிக்க நாடான சைரேவுக்குச் சொந்தமான வானூர்தியைப் போர்த்துக்கல் வாடகைக்கு எடுத்து, *419* கடுமையான போர்க்கருவிகளையும், *15,209* கி. எடையுள்ள வெடிமருந்துகளையும் இலிசுபனில் ஏற்றி இலங்கைக்கு அனுப்ப — அந்த வானூர்தி திருவனந்தபுரத்தில் வந்து எரிபொருள் தீர்ந்துபோய், 9-பிப்.85-இல் இறங்க — அதை அங்குள்ள இந்தியக் காவல்துறை தளைப்படுத்த, **'அக் கருவிகளில் என்ன, தமிழர்களைக் கொல்வதற்காக என்ரு எழுதப்பட்டுள்ளது'** என எகத்தாளம் பேசி, அவ்வானவூர்தியை இலங்கைக்கு விடுவிக்க இராசீவ்காந்தி கட்டளையிட்டாரே, அப்பொழுதே வெளிப்படையாகத் தெரிந்து விட்டது, இவர் தமிழினத்தை ஒட்டு மொத்தமாகவே அழித்தொழிக்க செயவர்த்தனுவுடன் கூட்டுச் சேர்ந்து விட்டார் என்னும் கரவான உள்நோக்கம்.

ஆகத்து, 85-இல் இவர் மிகக் கொள்கையாளர்களான புலிகள் இயக்கக் கருத்தாளர் பாலசிங்கத்தையும் டெலோ இயக்கத்தைச் சேர்ந்த சத்தியேந்திராவையும், புரொடெக் இயக்கத்தைச் சேர்ந்த சந்திரகாசனையும் நாடுகடத்தித் தமிழீழ

(தொடர்ச்சி 9 ஆம் பக்கம்)

# யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படை!

(24-10-87 இந்து டி. பி. எசு. செயராசு செய்தியின் பின்னணி)

அக்டோபர் 10 காரிக்கிழமை. யாழ்ப்பாணத்தில் நிலவிய குறுகியகால அமைதியும் கலைந்தது. கலைத்தது யார்? 'சாந்தி சேனை' என்றும், 'அமைதிப் படை' என்றும் பொய்முகம் புனைந்து இந்தியப் பாசிச ஆளும் கும்பலின் வன்முறைப் பிரிவான இந்தியப் படை!

10-10-87 காலை இந்தியப் படை யாழ்ப்பாணம் தமிழ்ச்செய்தித்தாள்கள் அலுவலகங்கள் இரண்டின் மீது பாய்ந்து, செய்தியாளர் உள்பட ஊழியர் அனைவரையும் தளைப்படுத்தியது. அலுவலகங்களை மூடி முத்திரையிட்டனர். அது போதாதா? அந்த அலுவலகங்களை வெடி மருந்துகளைக் கொண்டு தகர்த்தும் அமைதியைக் குலைத்தும். இந்தியப் படை விடுதலைப் புலிகளைப் போருக்கு இழுத்தது.

யாழ்ப்பாணத்தின் மீது ஐந்து முனைகளில் இருந்து இந்தியப்படை தாக்குதல் தொடுத்தது. பொது மக்களை இந்தியப் படை தாக்காது என்ற நம்பிக்கை பொய்த்தது. அவர்களின் முகாம்களில் இருந்தும், வானூர்திகளில் இருந்தும் கண்டபடி சுட்டுக்கொண்டே இருந்தனர். ஆனால் வானூர்தித் தாக்குதல் இல்லை எனப் பாசிச இராசீவ் அமெரிக்காவில் நேருரையளித்தார்.

யாழ்ப்பாணத்தின் ஒன்றுமறியாய் பொது மக்களை அன்றைய நிலவரப்படி இந்தியப் படை கொன்ற புலிகள் 192. படுகாயப் படுத்தியது 485 (குறைந்த பக்கம்).

யாழ்ப்பாணத்தின் மின்சாரத்தைத் துண்டித்து இருளுக்குள் ஆழ்த்தியது, இந்தியப் படை, காலவரம்பற்ற ஊரடங்கு உத்தரவைப் பல நாள்கள் தொடர்ந்து நீடித்து வாழ்க்கையையும் சீர்குலைவு ஆக்கினர். சாலை, தொடர்வண்டிப் போக்கு வரத்துகளை நிறுத்தினர். செய்தித்தாள்களோ, கடிதங்களோ வரவில்லை. பொய்களை மூலப்பொருளாக்கிய 'ஆகாசவாணி'ச் செய்திகளோ நம்பகத்தன்மையை இழந்தன.

யாழ்ப்பாண மருத்துவக்கல்லூரிக்கும் மருத்துவ மனைக்கும் மின்சாரம் இல்லாமல் செய்தது இந்தியப்படை.

மூன்று இலக்கம் மக்கள் வீட்டை விட்டு வெளியே ஓடினர். இந்தியப்படை முன்னேறும் இடங்களில் எல்லாம் கொடுமைகளுக்கு அஞ்சி மக்கள் ஓடினர். கிடைத்த படகுகளிலும் தப்பி ஓடினர்.

இந்தியத்தாய் என மகிழ்ந்த யாழ்மக்கள் இந்தியப் பாசிச ஆளும் கும்பலின் வன்முறையைக் கண்டு அஞ்சினர். இந்திய ஆளும் கும்பல் தனது தன்னல நோக்கத்துக்காக என்ன செய்தாலும் விடுதலைப் புலிகளைக் கொலை செய்யும் போரைத் தொடங்கார் என நம்பினர். இந்தியா மீது யாழ்மக்களின் நம்பிக்கை சீர்குலைந்தது. உண்மை நிலை இவ்வாறிருக்கையில் யாழ்மக்களுக்கு இவர்கள் உணவு ஊட்டுவதாகப் படம் பிடித்துப் போடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 3 அயிரமாத்திரி (கிலோ மீட்டர்) தொலைவில் உள்ள கொக்குவில் — இல் இந்தியப் படையின் வீரதீரம், யாழ்ப் பல்கலை வளாகத்துக்கு அருகில் இருந்த விடுதலைப் புலிகளின் பாசறையை வளைத்து நொறுக்க, மிகத்தேர்ந்த தலைசிறந்த அதிரடிப்படையை அருகில் இருந்த சுடுகாட்டில் திருகுஊர்தி மூலம் இறக்கினர். புலிகளின் மும் முனைத் தாக்குதலில் 29 பேர் இறந்தனர். ஒருவர் தளைப்பட்டார். எஞ்சியோர் தப்பிப்பிழைத்து ஓடும் போது கொக்குவில் பிரம்படிச் சந்தில் 40 ஏதுமறியாப் பொது மக்களைக் கொன்றனர். புறமுதுகிட்ட அதிரடிப்படையை மீட்க விரைந்த இந்தியப்படைக் கவச ஊர்திகளைப் பொது மக்கள் மீது ஏற்றி எழுபேரைக் கொன்று மகிழ்ந்தனர்.

இவர்களிடம் விடுதலைப்புலிகள் கருவிகளை ஒப்படைத்து விட்டுக் கட்டுப்பாடின்றி அடிமைப் பட்டால் என்ன ஆகும்?

உங்கள் அரணில் இருந்து தகரி (பீரங்கி)கள் யாழ் நகருக்குள் சகட்டு மேனிக்குக் குண்டுகளைப் பொழிகிறதே எனக் கேட்டதற்கு, தேவையான குறைந்த அளவு வலிவே பயன் படுத்தப்படுவதாக இந்தியப் படை அதிகாரி கூறுகிறார்.

இவ்வாறெல்லாம் யாழ்மக்களைக் கொலை செய்யும் இந்திய ஆளும் கும்பல், பொது மக்கள் சாவுக்குப் புலிப்படை பொதுமக்களைக் கவசமாகப் பயன் படுத்துகிறது என ஒரு பொய்யை நிலை நிறுத்திய பின், இந்திய அதிகாரி எகத்தாளமிடுகிறார். புலி, ஆட்டுக்குப் பின்னால் பதுங்கியதை நான் அறிந்ததேயில்லை. புலி அவ்வாறு பதுங்கவில்லை. ஆனால் நயவஞ்சக நரிகள் ஆன இந்திய ஆளும் கும்பலுக்கு யார்தான் அஞ்சாமல் இருக்க இயலும்? போர் நிறுத்தத்துக்கும், அதன் பின் கருவி ஒப்படைப்புக்கும் புலிகள் இணங்கிய போதிலும், 15 நாள்களாகக் கொலை வெறியிலேயே கருத்தாக இருக்கிறது ஆளும் கும்பல்.

2000 விடுதலைப் புலிகளைக் கொலை செய்ய 28000 இந்திய வீரர்கள்! அம்மட்டோ? இந்தியக் கடற்படை, வானூர்திப் படையின் பேரழிவுகள் தகரி (டாங்கு)கள் வானூர்தி மூலம் யாழ் செல்கின்றன. போரின் தொடகத்திலேயே இந்தியப்

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)
தும் முதல் கடிதம் இது. உங்கள் இயக்கத்தைப் பற்றியோ அல்லது 'தமிழ் நிலம்' போன்ற இதழ்களைப் பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது. சென்ற கிழமைதான் 'தமிழ் நில'த்தைக் கண்ணுற்றேன். குறிக்கோள்களையும் அறிந்தேன். உங்கள் கொள்கை (இலட்சியங்)களை மிகவும் போற்றுகிறேன். உயர்ந்தவை (உன்னதமானவை) என்பதில் ஐயம் இல்லை. ஆனால் தனித்தமிழ்ப் பற்றுதான் என்னைக் கவரவில்லை. தனித்தமிழ் என்ற உணர்வால் (வெறியால்) உங்கள் இதழ் தோல்வியைச் சந்திக்கிறது. 'மொழி' என்பது மாறி வரும் கால கட்டத்திற்கு ஏற்ப வளைந்து கொடுத்து வளர்ந்து வரும். சங்க காலத்தில் இருந்த தமிழ்தான் இப்போதும் வேண்டும் என்று அடம் பிடிப்பது முட்டாள்தனமான ஒன்று. காலத்தின் கட்டாயத்தால் தமிழ் மொழி மாறும்! இதனை யாரும் தடுக்க முடியாது. பிற மொழிகளின் தாக்குதல்கள் வரத்தான் செய்யும். சங்க காலத் தமிழ் நடை இடைக்காலத்தில் இல்லை. இடைக்காலத் தமிழ் இக்காலத்தில் இல்லை. இக்காலத்திய தமிழ் உறுதியாக எதிர்காலத்தில் இருக்காது. இதனை யாரும் தடுக்க முடியாது. ஆகையால் நீங்கள் நடை முறையில் உள்ள தமிழைப் பயன்படுத்துங்கள். மிகவும் செயற்கையாக "மகிழ்வூர்தி", "குமுகாயம்", "மருகர்" போன்ற சொற்களைப் பயன்படுத்தி எழுதினால், பேசினால் அது நடை முறைக்கு ஒத்துவராது. மாறாக அது மற்றவர்களை எரிச்சலடையச் செய்யும். வெகு மக்களை அடையாது. ஒரு சிறு கும்பலுக்குள் குதிரையை ஓட்டிக்கொண்டுதான் இருக்க முடியும்!

இன்றைய நிலையில் இந்த நாட்டில் எங்குப் பார்த்தாலும் ஒரே நேர்மையின்மை, ஒழுங்கின்மை (அக்கிரமம்) நடைபெற்று வருகிறது. பேட்டை அரம்பன் (ரௌடி)களும் பொறுக்கிகளும் நாட்டில் அரசியல்காரர் (வாதி)களாக மாறிக்கொண்டு வருகிறார்கள். படித்தவர்களும் பண்டிதர்களும் ஒதுங்கி வாழ்கிறார்கள். "தில்லி செல்லுகின்ற வானூர்தியில் பெரம்பலூர் பா.உ. (எம்.பி.) குடி வெறியில் பணிப் பெண் கையைப்பிடித்து இழுத்தார். தகாத உடலுறவுச் சொற்களை உரக்கப்பேசினார்" என்று செய்தி வருகிறது. "சட்டமன்ற அவைத் தலைவரின் அதிகாரம் வானளாவ எல்லையற்றது" என்று பி. எச். பாண்டியன் முறைகேடு செய்கிறார். நெகமம் கந்தசாமி, தாமரைக்கனி போன்ற ஆளுங்கட்சி ச.உ.க்களும் இரகுமான்கான், வீரபாண்டி ஆறுமுகம் போன்ற தி.மு.க. உறுப்பினர்களும் செய்த அட்டூழியங்களுக்கு எல்லையே கிடையாது. ஆளும் கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் இந்த நாட்டில் மிக அஞ்சத்தக்க அளவில் காட்டு ஆட்சி (தர்பார்) செய்து மக்களை ஏமாற்றுகிறார்கள். எம்.சி.ஆர், கருணாநிதி, மூப்பனார் இராசீவ் போன்றவர்களின் கொடிய, ஊழல் கதைகளை எழுதுவது என்றால் இடம் போதாது. மக்களும் இவர்களைத்தாம் ஆதரித்து வளர்த்து வருகிறார்கள். சென்ற கிழமை 'சூனியர் விகடனில்' ஒரு கட்டுரை பார்த்தேன், நெல்லை மாவட்டப் பணக்குடியில் ஓர் ஏழைப் பெண்ணைக் காவல் நிலையத்தில் கொடுமை செய்த விளக்கம். அங்கு உண்மைக்காகப் போராடிய சிலர் இப்போது இரக்கத்துக்கு உள்ளாகி விட்டனர். ஏனெனில் அந்த ஏழைப் பெண். இறுதியில் தன் முறையீட்டைத் திரும்பப் பெற்றுக் காவலர்களுக்கு ஆதரவாகி விட்டாள்! காரணம் பணத்தாசைதான்! அல்லது அதிகார வகுப்பின் அடக்கு முறை அச்சம்!

இது போலப் பல நிகழ்ச்சிகளை நாளும் காணலாம். இன்று செய்தித்தாளைப் படித்தால் அதில் வரும் பல செய்திகள் என்னைத் தாக்குகின்றன.

"கடன் தொல்லையால் குடும்பமே தற்கொலை", "குழந்தைகளைக் கிணற்றில் வீசிப், பெண் தற்கொலை" மாப்பிள்ளைக் கொடை (வரதட்சணை) கொடுமை; பெண் சாவு" — இதுபோன்ற நிகழ்ச்சிகள் இப்போது மிக அதிகமாக நடைபெறுகிறது. நான் படித்த ஒரு பல்கலைக்கழகத்தில் பல மாணவிகள் தங்கள்கற்பை விலைபேசி விற்று, அதன் மூலம் பெறும் பணத்தைக்கொண்டு கல்விச்செலவை ஈடுகட்டுகிறார்கள்! என்ன கொடுமை? இதற்குக் காரணம் என்ன? வறுமைதான். அறிவு இருந்தாலும் பணம் இல்லாவிட்டால் படிக்க, பட்டம் வாங்க முடியுமா? சில பேராசிரியர்களும் தங்கள் மாணவிகளை இப்படிப் பயன் படுத்துகிறார்களே!

'சுட்டி' என்னும் இதழைப் படித்திருப்பீர்கள்! இதில் வரும் கருத்துகள் மிகவும் மனத்தை நெருடச் செய்யும் படியாக உள்ளன. ஆனால் 'சுட்டி'யால் வெகு மக்களைக் கவர முடியவில்லை! காரணம் இதன் சிறிய அளவு மற்றும் போதிய விளம்பரம் இன்மைதான். நீங்கள் இதுபோன்ற கருத்துகளை விரிவாக எடுத்துச் செல்லுங்கள். கிழமை தோறும் ஏறத்தாழ ஓர் இலக்கம் படிகள் விற்பனையாகும்படி பல பொது அறிவுச் செய்திகளுடன் குமுகாயத்தில் நடைபெறுகிற கொடுமைகளைப் படம் பிடித்து வெளியிடுங்கள். பல வெளிநாட்டு இதழ்களின் கட்டுரைகளையும் வாழ்க்கைப் படப்பிடிப்புகளையும் வெளியிடுங்கள். வெகு மக்களைக் கவர வேண்டும்.

வரலாற்றில் பல ஈக நிகழ்ச்சிகளை — மாபெரும் வெற்றிச் செயல்களை — மறைத்து விட்டது ஆளும் அதிகார இனம்! ஈகி, மாவீரன் தோழன் பகத்சிங்கின் ஈகங்கள் மறைக்கப்பட்டன. நேத்தாசி சுபாசு பாபுவின் வீரதீரச் செயல்களை மூடி மறைத்து விட்டார்கள். நலம் நுகர்ந்த காந்தியும், போலி மாந்தன் நேருவுந்தாம் இந்த நாட்டின் தந்தைகளாக வண்ணிக்கப் படுகிறார்கள். என்ன கொடுமை! பாடத்திட்டத்திலும் வெகு மக்கள் கருவிகளின் மூலமும் இப்படிச் செய்கிறார்கள், இன்றைய இளைய தலைமுறையினர். பின்னர் எப்படி உருப்-

படுவார்கள்?

விழிப்புணர்ச்சியற்ற படித்தவர்களுக்கும், எளிய பொதுமக்களுக்கும் ஒப்போலை (ஓட்டு) உரிமை வழங்கினால் அ'து ஏதத்தில்தான் முடியும். இதனை நாம் இப்போது கண் கூடாகக் கண்டு வருகிறோம். விடுதலைப்புலி பிரபாகரன் கூறுவது போல ஒரு கட்சி ஆட்சிமுறைதான் தேவை! சோவியத்து உருசியாவின் வெற்றிப் பாதையில் நாமும் செல்ல வேண்டும். உறுதியாய் இந்த உலகில் பிரபாகரன் தலைமையில் ஈழத்தில் இப்படிப்பட்ட உண்மையான பொதுவுடைமை நல்லாட்சி மலரும் என நினைக்கிறேன். பொன்பரப்பியில் வங்கிப்-பணத்தை மக்கள் இயக்கத்திற்காகக் கைப் பற்றப் போன தமிழரசனை அடித்துக் கொன்ற நிகழ்ச்சியை, இந்த நாட்டுத் தாள்களும் மக்களும் ஞாயப் படுத்துவதை நெஞ்சந்துயருடன் பார்த்துக் கவலைப் படுகிறேன். "மலையூர் மம்முட்டியான்" என்ற திரைப்படத்தைப் பாருங்கள். இந்தக் கதைதான் தமிழரசன் கதை! தமிழரசன் ஒரு மாபெரும் சிந்தனையாளர்; ஈகி (தியாகி). இவர் நினைத்திருந்தால் அன்றே 1967-இல் நல்ல வேலையில் சேர்ந்து இன்று வண்டியும் வளமனையுமாக வாழ்ந்து இருக்கலாம். ஒரு பொறியியற் கல்லூரி மாணவன், (B.E Chemical Engineering Student) பொது நலத்துக்காகப் போராட நேர்ந்து, இப்படி ஆகிவிட்டதே! குடமுருட்டிக் குண்டு வெடிப்பு மக்களை ஈர்ப்பதற்குத்தான் செய்தார் மருதையாற்றுப் பாலத்தைத் தகர்த்தது ஒரு பொது மக்கள் ஈர்ப்புக்காகவே (Mass attention -க்காகவே!) மக்களைக் கொல்வதற்கு அன்று! இந்தப் பாலம் வெடித்துத் தகர்க்கப்பட்டவுடன், பலமுறை அரியலூர் காவல்துறைக்கும் புகைவண்டி நிலையத்திற்கும் அவர் உடனடித் தகவல் கொடுத்துத் தொடர்வண்டியை நிறுத்த வேண்டினார். ஆனால் சோம்பேறி அதிகாரிகள் இதனைப் பொருட்படுத்தாமல் விட்டு விட்டனர். இறுதியில் அவப்பெயர் தமிழரசனுக்கே ஏற்பட்டது. வங்கியில் பணத்தை அவர் கைப்பற்றும் போது உயிர்க்கொலை ஏற்படக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் இரண்டு முறை துமுக்கியால் மேல் நோக்கிச் சுட்டு அச்சுறுத்தினார். ஆனால் அந்தக் காசாளன் அச்சப்படாமல் இவர்களைப் பிடித்துக்கொடுக்க முயற்சி செய்து கூக்குரல் எழுப்பினான். இறுதியில் வேறு வழியின்றித் துப்பாக்கியால் அந்தக் காசாளரைச் சுட்டார்கள். இந்த பணம் எதற்கு? தனது தனிநலச் செயல்கட்கு அன்று; தனது இயக்கத்தை நடத்தி செல்வதற்குத்தான். பணத்தைத் தனியாரிடம் இருந்து அவர்கள் கவரவில்லை. முதலாளித்துவக் கொடுங்கோன்மையான அரசின் வங்கிப் பணத்தையே அவர் கைப்பற்ற முயற்சி செய்தார். இது கொள்ளை அன்று; தகரி (பீரங்கி) வணிகத்தில் கோடிக்கணக்கில் இடைத்தரகு செய்து பெற்ற பணம்தான் கொள்ளை! மக்களின் பார்வைக்கு எது ஞாயமற்றது, ஞாயமானது என்றெல்லாம் தெரியாது. தெரிந்து கொள்ளவும் முயற்சி செய்ய மாட்டார்கள். அவர்களுக்குப் புரிய வைக்கவும் முடியாது.

நீங்கள் "*தமிழ் நிலத்தில்*" தமிழரசனைப் பாராட்டி எழுதியிருப்பதற்கு என் நன்றிகள். ஆனால் இதுமட்டும் போதாது. நீங்களும் உங்கள் இயக்கத் தோழர்களும் பொன்பரப்பி சென்று நேரடி ஆய்வு செய்து மறைக்கப்பட்ட உண்மைகளை மக்களுக்கு எடுத்துச் சொலுங்கள். அஞ்சாதீர்கள்! துணிவுடன் முயற்சி செய்யுங்கள். காவலர் மாறு உருவத்தில் தமது குண்டர் பட்டாளத்துடன் தமிழரசன் குழுவை அடித்துக் கொன்றுவிட்டது. தமிழரசன் குழுவில் ஒரு கருங்காலியால் காவலர்க்குத் திட்டத்தைக் காட்டிக் கொடுத்து இப்படித் துயர முடிவு ஏற்பட்டு விட்டது என நினைக்கிறேன். காவலரின் கொடுமைகளையும் அரசியல்காரர் கீழ்நிலை வேலைகளையும் பொதுமக்களின் துன்ப துயரங்களையும் காரணங்களையும் துணிவுடன் வெளியிட்டுத் தமிழ் மாநிலத்தில் ஒரு புதிய விழிப்பு உணர்ச்சியை தட்டி எழுப்புங்கள் பணியில் வெற்றி ஏற்பட வாழ்த்துகிறேன்.

—*ஒரு தமிழ்க் குடி மகன்*, கோவை.

---

## தமிழர்கள் நம்ப மாட்டார்கள்!

தமிழ்த்திரு: ஐயா. வணக்கம். ***தென்மொழி*** அட்டையில் '***தமிழ்நாடு தமிழர்க்கே***' '***தமிழ் ஈழம் வெல்க***' என்ற முழக்கங்கள் இடம் பெற்றுள்ளன. 'சொல்லுதல் யார்க்கும் எளிய' என்ற முறையில் நெடுங்காலமாக இந்த முழக்கங்கள் ஒலிக்கப்பட்டு வருகின்றன. தங்கள் எண்ணம், எழுத்து, பேச்சு ஆகிய திறன்கள் தமிழ் - தமிழன் - தமிழ்நாடு என்ற பற்றையும், எழுச்சியையும் உண்டாக்கி வருகின்றன.

கடந்த காலத்தில் திராவிடர் கழகமும் 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்று எழுதிப் பார்த்தது. ஏற்போர் இல்லை என்பதறிந்து எழுதியதையும் விட்டு விட்டது. '***தமிழ் நிலம்***' பற்றிய கொள்கையில் உறுதியாக இருப்பவர் '***தாங்கள் ஒருவரே***' என்பது தொடர்புடையவார்களுக்குத் தெரியும். ஏறக்குறைய ஐம்பதாண்டுகளாகத் தமிழ் நிலத்தில் 'விடுதலை' வித்துகள் தூவப்பட்டு வந்தன. கருத்து விளக்கம் கால் நூற்றாண்டு நடைபெற்று உள்ளது. வித்தும் விளக்கமும் வெற்றிக்குத் துணை நிற்கும் என்று பொருளியல் புரட்சியாளர்கள் நம்பினர். அவர்களில் முனைப்புற்ற தொண்டர்கள் 'மொழிப்பற்றும், இனப்பற்று நாட்டுப்பற்றும்' மிக்குத் தமிழ்க்கொடி பறக்க விரும்பிப் பாசறை அமைத்துப் படை திரட்ட முயன்றனர். முயன்றவர்கள்

முறையற்ற செயல்களால் முடிந்தே போனார்கள்.

நிலம் மீட்க முயன்றவர்களுக்குப் பற்றோ, இரக்கமோ கொண்டு, 'தேநீர்' கொடுத்தவன், பசியாற்றியவன் எல்லாம் மனைவி - மக்களோடு எமன் தூதர்களிடம் பட்டுவரும் தொல்லைகளும் அடைந்து வரும் அவமானங்களும் ஏட்டில் எழுத இயலா. 'முனைப்புற்ற' முன்னணித் தொண்டர்கள் நெடுமரமாய் வீழ்ந்து, ஏதிலிகளாய்க் கிடந்து நிலமகள் ஏற்ற போதும், உறவுகொண்டு செல்ல ஒருவருக்கும் — உரியவர்களுக்கும் துணிவில்லை. பெற்று வளர்த்துப் படிக்கவைத்து எதிர்காலக் கற்பனையில் இன்பங் கண்ட பெற்றோர்களும், உடன் பிறப்புகளும் எமன் தூதர்களின் கொடுமைகளுக்கு அஞ்சி ஒதுங்கி விட்டனர். பொதுவுடைமைப் புரட்சிக்கு வழிகாட்டிப் போர்முனைக்கு அனுப்பியவரெல்லாரும் போனவிடம் தெரியவில்லை.

மொழி, இனம், நாட்டுப்பற்று மிக்கத் தொண்டர்களுக்கு 'நக்சலைட்' முத்திரை குத்தியவுடன், 'வாய் வீச்சு வல்ல கொள்கை மறவர்கள்' தாக்கப்பட்ட குடும்பங்களோடு பேசுவதற்கே அஞ்சி ஒதுங்குகிறார்கள். செயல் வீரர்கள் சீரழியக் காரணம் என்ன என்பதைப் பற்றி நினைப்பதும் இல்லை. பிள்ளைகளை இழந்து பெற்றோர்களுக்கும், கணவனை இழந்த மனைவிக்கும், தந்தையை இழந்த பிள்ளைகளுக்கும் ஆறுதல் கூறக் கூட ஆள் இல்லை. இந்த நிலையில் அவர்கள் வாழ்நிலை எப்படி இருக்கும்?

இத்தகைய வரலாறு தொடர்கின்ற தமிழ்த் திரு நாட்டில், உங்கள் பேச்சும், எழுத்தும் (தமிழ் நிலம், விடுதலை பற்றியவை) உண்டாக்கி வரும் விளைவுகளை உணர்ந்து செயல்பட வேண்டும்.

## புதிய 'கலாச்சாரம்'

தமிழனின் பண்பாடு மெல்ல அழிக்கப்பட்டு ஆரியப் பண்பாடு திணிக்கப்படுகிறது என்பதற்கு அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சி சான்றாக அமைகிறது. கடந்த ஆகச்டு 9 முதல் 20 வரை 'அகில பாரதீய வித்யார்த்தி பரிசத்' என்ற ஆர். எசு. எசின் மாணவர் அமைப்பு தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் வகையில் தமிழகத்தில் உள்ள மாணவர்களுக்கு இராக்கி கட்டியுள்ளனர். இராக்கி என்பது 'சகோதரத்துவ'த்தை வளர்ப்பதாக அவர்கள் கூறுகின்றனர். இவ்வகையில் அவர்கள் 15,000 பேருக்கு 'இராக்கி' கட்டியுள்ளதாக 12-9-87 தேதியிட்ட சுற்றறிக்கையில் கூறியுள்ளனர். இனி தமிழர்கள் தங்களுக்குள்ளாக 'இராக்கி' கட்டிக்கொண்டு தாங்கள் என்றும் ஆரிய அடிமைகள் என்பதைக் காட்டிக் கொள்ளப் போகிறார்கள். அ. பா. வி. ப அமைப்பினர். மீரட்டில் உள்ள முகமதியருக்கும் இராக்கி கட்டி 'சகோதரத்துவ'த்தை வளர்க்கலாமே!

—தமிழ் முகிலன்.

தென்மொழி'யின் கருத்துகளால் உருப்பெற்ற தொண்டர்கள் குடும்பம் அவமானப்பட்டு, அழிநிலையில் அல்லல் படுகின்றது. போக்கிடம் இல்லாமல் புகலிடம் தேடும் குடும்பத்தவர்களுக்குத், தென்மொழிக் (கருத்து) வீரர்கள் துணை நிற்பார்களா? நாடெங்கும் தாக்குண்டவர்களின் கணக்குத் தெரியுமா? இதற்கு விடை இல்லை என்பதே ஆகும்.

அதனால், நிலம் மீட்கும் கருத்துகளை பேசாமலும் எழுதாமலும் இருப்பதே நல்லது. 'தமிழ் ஈழம்' 'கானல் நீராகி விட்டது'. இந்த வரலாறு அறிந்துவரும் நிலையில், 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்று எழுதுவதும் பேசுவதும், 'வன்பாற் கண் வற்றல் மரம் தளிர்க்கும்' என்பது போல் இருக்கிறது. பசி வந்திடப் பத்தையும் பறக்கவிடும் தமிழர்கள் நம்ப அணியமாக இல்லை. நம்பமாட்டார்கள். மற்றவை பின்னர்.

தங்கள் தமிழன்பன், குரும்பலூர்.

# படையும் கத்தியும்.

தமிழ் நாட்டு மக்கள் மரபுக் கருவிகளை எல்லாம் திரைப்படங்களிலும், காட்சிக் கூடங்களிலுமே கண்டு வந்திருக்கிறார்கள். இவர்களிடம் ஓரிரு முறை நடக்கும் மோதல்களில் பயன் படுத்தப்படும் கருவிகள் கூட எளிய தமிழ் மக்களுக்கு உரியன அல்ல. அவை, பொருள் வளம் படைத்தவர்களின் உடைமைகளாகவே இருக்கும்.

மக்களிடமிருந்து நிலத்தை, கருவிகளை, மற்றும் உள்ள சிறுசிறு உடைமைகளை எல்லாம் பறிமுதல் பண்ணி அவர்களைக் 'கட்டுப்பாடு' அற்றவர்களாக்கி விட்டார்கள். எனவே, இவர்கள் 'யாரின் அடிமைகளாகவோ' இருந்து வருகின்றார்கள்!

தி. மு. க. தலைவர் 'தொண்டர்படை' என்பதும், இதனை உடனே, 'போர்க்கோலம் புனைந்து' களத்தில இறங்கிவிட்டதாகக் கருதி ஓர் அமைச்சர் தி. மு. க வைத் தடைசெய் என்று கூறவும் கண்டோம். உடனே, முதல்வராக உள்ளவர் 'கத்தி'யை எடுக்கும்படி அறிவுரை கூறுகின்றார்.

படை ஒருபக்கம், கத்தி ஒருபக்கம்! இரண்டு அணிகளும் ஒன்று சேர்ந்தால் எதிரி தொலைந்தான்! ஆனால் இங்கே ஓரணியில் நிற்க வேண்டிய மக்களைப் 'படை' என்றும் 'கத்தி' என்றும் பிரித்து வைக்கிறார்கள்!

தி. மு. க அமைப்பில் வலியது. அ. தி. மு. க ஆட்களில் கூடியது. 'அமைப்பு'ம் 'ஆள்'களும் சேருதல் வேண்டும். படையிடம் கருவி இருத்தல் வேண்டும். இரண்டினையும் பிரித்து வைத்து ஆளும் கும்பல் தேசிய இன விடுதலையை முனை மழுங்கச் செய்கின்றது. இதற்குத் தொடர்ந்து ஏவல் புரிகின்றவர்களாக இருப்பது தமிழர்க்குத் தாழ்வையே தரும்!

—பறம்பை அறிவன்.

Scanned with CamScanner

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் போராட்ட வேகத்தையே சூழ்ச்சியாக அழிக்க முன்பே திட்டமிட்டார். ஆனால், மக்கள் எழுச்சியால் மண்டியிட்டார். நாடு கடத்தப்பட்டவர்கள் 'மக்கள் கிளர்ச்சியால் வரவேற்றுக் கொள்ளப்பட்டார்கள்.

ஆனால், இப்பொழுதும் கூட, கடந்த அக்டோர் மாதம் அமைதிப்படை என்னும் பெயரால் இலங்கைக்கு அனுப்பப் பெற்ற இந்தியப் படையைக் கொண்டு தமிழீழப் புலிகளை அடியோடு அழிப்பதும், அதன் வழி தமிழின முன்னேற்றத்தின் ஆணிவேர் சல்லிவேர்களையெல்லாம் அக்கக்காக அறுத்தெறிவதுமே இராசீவ் காந்தியின் மறைமுகத் திட்டமாகும். இஃது ஒன்றும் கணிப்பாகவோ கற்பனையாகவோ நாம் சொல்வதில்லை. இராசீவ் காந்தியே தம் வாய்மூலமாகத் தெரிவித்த கருத்தாகும். 'விடுதலைப் புலிகளை அடியோடு அழித்தொழிப்பதுதான் இந்தியப் படையின் வேலையாகும்' என்று அவர் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளை அழிப்பது என்றால், தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தை ஒழிப்பது என்பதுதானே பொருள். உரிமையை ஒழிப்பது என்பது இனத்தை நிலையாக அடிமைப்படுத்தும் செயல். ஓர் இனத்தை நிலையாக அடிமைப் படுத்துவதும் அதை ஒழிப்பதும் ஒன்றுதான். அதன் பின்னர் ஓர் இனத்திற்கு உரிமை வாழ்க்கை என்பது என்ன இருக்கிறது? என்றென்றும் அடிமையாகவே கிடந்து! மண்ணோடு மண்ணாக மட்கிப்போக வேண்டியதுதானே!

இவ்வாறான இராசீவின் மறைமுகத் திட்டத்திற்கும் நேரடி முயற்சிக்கும் ஆதரவு காட்டிக் கை கொடுப்பதே இங்குள்ள பழனியாண்டி, செயகாந்தன், சிதம்பரம், மூப்பன் போலும் சோற்றுக்குக் கையேந்திகளின் நோக்கமும், செயலுமாகும். மற்றபடி இங்குள்ள 'சோ'க்களின் முயற்சி பற்றி நாம் சொல்ல என்ன இருக்கிறது? அஃது அவர்களுடைய இனப் பணியாகும். ஆனால் பழனியாண்டிகளுக்கும், செயகாந்தன்களுக்கும் சிதம்பர, மூப்பன்களுக்கும் என்ன வந்தது? தாங்கள் உண்ணும் பிச்சோற்றுக்காகத் தங்கள் இனத்தையே காட்டிக்கொடுக்கும் - அடகு வைக்கும் - கருவறுக்கும் — செயல்தானே அவர்கள் செய்வது?

எனவே தமிழர்கள் மிக எச்சரிக்கையாக இருந்து, இப்பொழுதுள்ள கால நிலைகளை நன்கு உணர்ந்து, சூழலை அறிந்து, இவ்விக்கட்டான இடர்ப்பாடான நிலைகளிலிருந்து, கடந்த மூவாயிரமாண்டு ஆரிய - தமிழர் போராட்டத்தில் அழிந்து போகாமல் மிச்சம் மீதியுள்ள தமிழினத்தையாகிலும் அழிபடாமல் காத்துக் கொள்வார்களாக. 0

## ஒரு வெளிநாட்டு மடல்!

அன்புடன் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் அறிவது.

தாங்கள் தனித் தமிழ் நாடு கோரி முன்னின்று நடத்தும் புரட்சிக்கு நான் ஒரு தமிழன் என்ற உணர்வுடன் நன்றி கூறிக் கொள்கிறேன். ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு தலைமுறைகளுக்கு முன் இந்நாட்டுக்கு வந்து சேர்ந்த எங்கள் முதாதையரை, அன்று ஈன்று அனுப்பி வைத்த வாழையடிக்கன்று நான் என்பதனைப் பெருமையோடு கூறிக்கொள்வதில் மகிழ்கிறேன்.

அத்தகைய வரலாறு மிக்க நாட்டில், நம் இனம் தமிழின்பால் பற்றின்றித் தனித்திரு நாட்டைப்பெற ஏமாறுவதில் பொருளே இல்லை. உலகம் முழுவதிலும் ஒவ்வோர் இனமும் தனக்கென ஒரு நாட்டை வைத்துக்கொண்டோ அல்லது உருவாக்கியோ வருகின்றனர்.

பாவலரேறு அவர்களுக்கு எனக்குத் தெரிந்த சிறு கருத்தைக் கூற விரும்புகின்றேன். இதுகாறும் நம்மினம் எந்நாட்டிலும் பொதுவானது, பொது சொத்து என்று தன்னைத் தானே பிறருக்குப் பொதுவாக வைத்ததனால் தனக்கென ஒரு நாடு, நமக்கென ஓர் இனம், நமக்கென ஒருமொழி என்பதையே மறந்துவிட்டது. இவ்வாறான கருத்து தமிழன் மனத்தில் வேறூன்றி விட்டதனால் அக்கருத்தை முதலில் அவன் மனத்தைவிட்டு அகற்ற முயற்சி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அவன் தனக்கென ஒரு நாடு, தனக்கென ஒரு வீடு என உணரமுடியும். நம் தோட்ட மல்லிகையை மாற்றான் கையில் கொடுத்துச் சுவைக்கும் தமிழினம் சேர, சோழ, பாண்டியர் வரலாற்றைக் கூறிப் பெருமை கொள்வதில் பொருளே இல்லை... ஆக... தாங்கள் போன்றோர் மேற்கொண்டு நடத்தும் தனித்தமிழ் நாட்டுப்போராட்டம் என்றாகிலும் ஒரு நாள் உறுதியாக வெற்றி பெற்றே ஆகும்.

—எசு. சீலன், சுங்கை, மலேசியா.

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் அழிம்புகள், செயவர்த்தனாவின் யாழ் அதிகாரிகள் அவரிடமே முறையிடும் அளவுக்குப் போயின.

இனப்படுகொலைஞன் செயவர்த்தனாவை நல்லவர் ஆக்கிவிட்டார் பாசிச இராசீவ். உலகளாவிய தமது ஊழல்களில் இருந்து மக்களின் கவனத்தைத் திருப்பவும், தமது கவைக்குதவாக காவு ஒப்பந்தத்தை ஈழமக்கள் மீது திணிக்கவும், விடுதலைப் புலிகளை மட்டுமல்லாது யாழ் மக்களையும் கொலை செய்கிறார். இதற்கு இந்திய மக்களின் பணம் நாள் ஒன்றுக்கு ரூபாய் 3 கோடி வீண் ஆகிறது. உயிரிழந்த இந்திய வீரர்கள் 153 ஆவார். 0

Scanned with CamScanner

# கொள்ளையடிப்பதுதான் விடுதலையா?

அன்பின் இனிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு!

தமிழ் நிலம், இதழ் எண். 91. (20-9-87) மக்கள் தண்டனையை மரபாக்குவதா என்னும் ஆசிரிய உரையில்...... "மத ஆளுமையும் முதலாளியச் சார்பும் கொண்ட கொடுமையான ஓர் அரசின் நடைமுறைகளைக் குடியரசு முறைப்படி எதிர்த்துப் போராடுவதில் வெற்றிபெற முடியும் என்னும் நம்பிக்கையை இழந்த இளைஞர்களே கருவிகளைக் கையிலெடுக்கிறார்கள்; வன்முறையில் போராடுகிறார்கள். அவர்களைக்...... கொடுமையாளர்கள், தீயவர்கள் என்றெல்லாம் பட்டம் சூட்டி அழைப்பது கொடுமையிலும் கொடுமையானது... .. ......மேலும் ஏழை உழவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் விடுதலை வாங்கிக் கொடுக்கும் நோக்கத்துடன்தான் தமிழரசனின் விடுதலைப் படை போராடியது......" ...என்பனவாகும்.

### கொள்ளையடிப்பதுதான் விடுதலையா?

ஏழை உழவர்களுக்கும் கூலித் தொழிலாளர்களுக்கும் விடுதலை வாங்கித் தருவது "வங்கியில் கொள்ளையடிப்பதும் கொலை செய்வதும் தாமா?" அவர்களைக் கொடுமையாளர்கள், தீயவர்கள் என்று கூறாமல் பரிசும் பட்டமும் கொடுத்து வாழ்த்துப்பாப் பாடுவதா!

அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் ஏழை எளிய மக்களை அறிவு புகட்டி விழிப்படையச் செய்ய வேண்டும். விடுதலை வேட்கையை அவர் மனத்திலூட்ட வேண்டும். இன்னின்ன வகையில் உழைக்கும் மக்களை ஆளும் வல்லாண்மை அரசு சுரண்டிக் கொழுக்கிறது. ஊதியத்தை முடக்குகிறது.

மொழி நிலையில், இன அடிப்படையில் இன்னின்ன முறையில் அடிமைப் படுத்தி வைத்துள்ளது. கல்வி, வேலைவாய்ப்புப் போன்றவற்றில் சரிநிகர் பங்கு தருவதில்லை போன்ற அடிப்படைக் கரணியங்களை எடுத்து விளக்கிக் காட்டி அவர்களுக்கு உணர்வூட்டவேண்டும். அவ்வாறு செய்யின் விடுதலைப் போராட்டத்திற்கு அவர்களின் மேலான அன்பும் ஆதரவும் கிட்டும்.

அதைவிடுத்துக் கொள்ளையடிப்பதும் கொலை செய்வதும் போராட்டமோ விடுதலையோ ஆகா. கெடுதலைதான் ஆகுமென்க.

மேலும் தமிழரசனும் அவரைச் சார்ந்தவர்களுடைய போராட்டமுறை சரியானதன்று. "எனவே விடுதலை நோக்கம் கொண்ட போராளிகள் சரியான போராட்ட முறைகளை முதற்கண் நெறிப்படுத்துக. அப்போதுதான் மக்கள் ஆதரவு கிட்டும். மக்கள் போராட்டமாக மலரும். வெற்றியும்

(தொடர்ச்சி 12- ஆம் பக்கம்)

# நாட்டினை மீட்டிடு!

ஆங்கில நாயகம் சென்றது - கொடிய
ஆரிய நாயகம் வென்றது;
தூங்கிய தமிழினம் தோற்றது - அடிமைத்
துயர்களை 'ஊழ்' என ஏற்றது!

'மாண்புகள்' ஒத்திசை ஊதின - தமிழ
மரபுகள் பகையுடன் மோதின;
ஆண்டுகள் நாற்பது கழிந்தன - தமிழின
அடிப்படைப் பண்புகள் அழிந்தன!

'கூலிகள்' தேசியம் பேசின - மொழியினக்
கொள்கையைக் குப்பையில் வீசின;
வேலிகள் பயிரையே மேய்ந்தன - ['கைந்நூல்'
வேட்டிகள் ஆரியம் தோய்ந்தன!

ஊழலும் கலையென வளர்ந்தது - விடுதலை
உணர்வெலாம் பொய்களால் தளர்ந்தது;
கேழலும் பொன்னுடை போர்த்தது - [பால்வெறிக்
கிளர்வுகள் இளைஞரை ஈர்த்தன!

வறுமையும் வழமையாய் நிலைத்தது - தமிழர்
வலிமையைப் பாரதம் குலைத்தது;
சிறுமையும் பணத்தினால் செழித்தது-ஒழுக்கச்
சிதைவுகள் உழைப்பினைப் பழித்தது!

காவிரி பாலையாய்க் கரிந்தது - புதினக்
கற்பனைச் சோலையாய் இரிந்தது;
பாவிரி புலமையும் பணிந்தது - ஒருமைப்
பாட்டினைப் பிதற்றிடத் துணிந்தது!

கல்வியும் கடைச்சரக் கானது-உள்ம்புணர்க்
காதலும் சாதியால் போனது;
கொல்வெறி மதத்தினால் கொழித்தது - [கடவுள்
கூத்துகள் தமிழரை இழித்தன!

யாழ்குடாப் படுகொலை காணடா - இந்திய
எத்தரை நம்பிடல் வீணடா;
தாழ்விலாத் தமிழினம் தாழ்ந்ததோ - [உன்னைத்
தன்னல ஆரியம் சூழ்ந்ததோ!

விடுதலைப் புலிகளைப் பாரடா - நீயும்
விரைந்தெழு, அணியெனச் சேரடா;
கொடுமென ஆரியம் ஓட்டடா - உரிமைக்
கொடியினைக் கோட்டையில் நாட்டடா!

உன்னின விலங்கினை உடைத்தெறி - [தன்னல
உணர்வெனும் உமியினைப் புடைத்தெறி;
சென்னியில் வாகையைச் சூட்டிடு - உரிமைச்
செந்தமிழ் நாட்டினை மீட்டிடு!

--தராங்கை பன்னீர்ச் செல்வம்.

# வழி இங்கே! தமிழா நீ எங்கே?

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் செயல்கள் இழப்பையும், இழிவையும் மட்டுமே தேடித் தருகின்றன. இவர் மட்டுமன்று; ஈழத்தில் இன்றுள்ள பெரும்பாலான இயக்கத்தின் தலைவர்களும் இதைப் போன்ற செயல்களிலேயே ஈடுபட்டு உள்ளனர். இவற்றிற்கு முகாமையான கரணியம் தலைமைப் பதவியின் மேல் உள்ள ஆசையே.

மேலும், இவர்களின் இயக்கங்கள் மக்கள் போராட்டமாக மாறுததும் இதற்குக் கரணியமாகும். சிங்கள மக்கள் அனைவரும் தமிழர்களுக்கு எதிர்ப்பானவர்கள் இல்லை. பல நேரங்களில் போராளிகளைக் காத்து வைத்திருந்த சிங்கள மக்களும் உண்டு.

இனக் கலவரத்தை அரசுதான் தூண்டுகின்றதேயன்றி, மக்களின் மக்கள் அதை எதிர்க்கின்றனர். இதை அக்டோபர் மாதம் 11-ஆம் பக்கல் திருகோணமலையில் நடந்த நிகழ்ச்சி உறுதிப்படுத்துகின்றது. அன்றைக்கு, ஆளும் ஒன்றிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எச். சி. பி. நெல்சன் மற்றும் அவரின் செயலாளர் இருவரும் அவர்கள் அலுவலகத்திலேயே ஒருவரால் குண்டு வீசித் தாக்கப்பட்டுள்ளனர், குண்டு வீசியவர் சிங்கள உழைக்கும் மக்களின் இயக்கமான 'சனதா விமுக்தி பெரமுனு' அமைப்பைச் சேர்ந்தவர். தாக்கப்பட்டவர் திருகோணமலை மாவட்ட அமைச்சர். தாக்கப்பட்ட கரணியம், அந்த அமைச்சர் சிங்கள மக்களைத் தமிழ்ப்பகுதியில் குடியேற்றியதே!

இந்நிகழ்ச்சிக்குச் சில நாள்கள் முன்பாகப் பிரபாகரன் அணியின் தலைவர்கள் சிங்கள அரசால் பிடிக்கப் பட்டதால் தற்கொலை செய்து கொண்டு விட்டனர். இதனால் புலிகள் சிங்களப் பொதுமக்களின் மேல் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதைக் காட்டி, இந்தியாவினின்று. சென்ற 'அமைதிப்படை' என்னும் தோல் போர்த்திய நரிகள் புலிகளை வேட்டையாடி வருகின்றனர்.

ஈழப் போராட்டம் இராசீவின் வலையில் சரியானபடி சிக்கியுள்ளது. இவரின் முன்னேற்பாட்டின்படி அமெரிக்கா சென்றிருந்தார் இங்கிருந்தால் ஏதாவது செய்தே ஆகவேண்டும் எனும் நிலை ஏற்படுமெனத் தமிழக முதல்வரும்(?) அமெரிக்காவிலேயே உடல் நலக்குறைவு என்னும் தடுப்பில் பதுங்கியிருந்தார்.

இந்நிலை நீடிக்குமாயின் பிரபாகரன் இன்னும் சில நாட்களில் கொல்லப்படலாம். அப்போது தமிழகத்தில் எழுச்சி ஏற்படுமென அறிந்து தமிழக மக்கள் சாதி உணர்வினால் பிரித்து வைக்கப் பட்டுள்ளனர்.

ஈழப் போராட்டம் தன் குறிக்கோளுக்கு மீண்டும் திரும்புவதற்கு — குறிக்கோளை அடைவதற்கு — ஒரே வழி, ஈழப் போராளிகள் தங்கள் இயக்கங்களை விட்டு பிரிந்து தங்களுக்குள் ஒன்று கூடி சிங்கள உழைக்கும் மக்களுடன் சேர்ந்து, சிங்கள இனக் கொள்கை அரசினைத் தூக்கி யெறிந்து விட்டு ஒரு புதிய கூட்டமைப்பு நாடு அமைத்தலே ஆகும்.

இக் கருத்தைச் சொல்லுங்கால் இங்குள்ள போலிப் பொதுவுடைமைப் புரட்சி(?)யாளர்கள், சிங்கள - தமிழ் மக்கள் இணையும் போது இந்திய மாநில மக்கள் இணைய முடியாதா எனக் கேட்கலாம். இந்தியாவைப் பொறுத்தமட்டில் இங்குள்ள மாநில மக்கள் கண்டிப்பாக ஒன்றிணைய மாட்டார்கள். இவர்கள் பொதுவாக உள்ள ஆறுகளையே சொந்தம் கொண்டாடுபவர்கள். மேலும் விடுதலைப் போராட்டக் காலத்திலும் கூட தந்தை பெரியாரின் திராவிடர் கழகம் தமிழகத்தின் எல்லையைக் கடந்து பரவிடவில்லை என்பதே எடுத்துக்காட்டாம். இது இந்த இளிச்சவாய்த் தமிழர்களின் ஏமாளித்தனத்தை மட்டுமே வெளிப்படுத்துமே யன்றி புரட்சியை ஏற்படுத்தாது.

—**மா. த. தமிழினியன்.** —மாத்தூர்.

## நெரிசல் ஏன்?

இன்று எல்லாப் பேருந்துகளிலும் நெரிசல் உள்ளது. அதற்கு மக்கள் தொகையைக் காரணமாக்கிக் காட்டுகிறது அரசு. ஆனால் மக்கள் தொகைக்கேற்பப் பேருந்து இல்லாமையே காரணம். நம் நாட்டில் மக்கள் பேருந்து நெரிசலில் தொல்லைப் பட்டுக் கொண்டிருக்கையில் இலங்கைக்கு 2,500 பேருந்துகளை இந்திய அரசு அனுப்பியுள்ளது. இதைக் கண்டு இளித்த வாய்த் தமிழர்கள் 'இந்தியா' தொழில் வளர்ச்சி பெற்றுவிட்டதாக பீற்றிக் கொள்கின்றனர். ஐயோ, தமிழகமே! நீ என்று விடுதலை பெற்று முழு வளத்தோடு திகழப் போகின்றாயோ?

—**தமிழ் முகிலன்.**

## ஓர் அறிவிப்பு!

'**தமிழ்நிலம்**' புதிய வடிவில் கிழமைதோறும் வெளிவரவும் எல்லா வகையிலும் மேன்மேலும் இதன் பொலிவும் வலிவும் வளரவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன. நம் தமிழின மீட்புக்கு இதுவே சிறந்ததொரு வாளாகவும் கேடயமாகவும் திகழ்வதாகும். அனைத்து நிலைகளிலும் நம் அன்பர்கள் பெரிதும் உதவுவார்கள் என நம்புகின்றோம்.

அன்பர்கள் ஆங்காங்கு நடைபெறும் இயக்கச் செய்திகளையும், தமிழின விழிப்புத் தொடர்பான செய்திகளையும், இன மீட்புக் கட்டுரைகளையும் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகிறோம்.

Scanned with CamScanner

# தடுப்பாருண்டோ?

**--கடவூர். மணிமாறன்**

எலிகளிடம் அரிமாக்கள் மண்டியிடல்
எந் நாளும் நிகழ்வ துண்டோ?
புலிக்கூட்டம் நரிகளின்முன் பொருகளத்தில்
புறங்காட்டும் வரலா றில்லை!
வலிவற்ற சிங்களத்துக் காடையராம்
வல்லூறு நகைக்கும் வண்ணம்
மலிவாகத் தமிழ்க்குருதி ஈழத்தைச்
சிவப்பாக்கும் கொடுமை காணீர்!

குண்டுகளின் பேரொலியும் துமுக்கிகளின்
அதிர்வேட்டும் தொடர்ந்து கேட்க
மண்டுபுகழ் யாழ்நகரோ எரியூட்டி
மாண்பிழந்த மதுரை போலக்
கண்முன்னே தெரிகிறது; காளையரில்
பெரும்பாலோர் களத்தில் மாளப்
பெண்டிர்களோ கற்பிழந்தும் பொற்பிழந்தும்
பெருந்துயருள் மாய்கின் றாரே!

பல்குழுவாய்ப் பிரிந்துநின்று பகைமைத் தீ
பல்க விட்டுப் பண்பி ழந்தே
சொல்லவொணுத் துயருற்றார்!
[தொடர்கதையாய்
அவலங்கள் சூழ்ந்து தாக்க
வெல்கின்ற நிலையின்றி விளங்காத
பொருளானார்! அடிநாள் தொட்டே
நல்லறிவும் ஒற்றுமையும் வாய்த்தி ருந்தால்
நாடொன்று முகிழ்த்தி ருக்கும்!

ஏதிலியாய் எடுபிடியாய் எல்லோர்க்கும்
இளைத்தவராய் இருப்ப தொன்றே
நாதியற்ற தமிழரது நடைமுறையோ?
நாணிலியோ தமிழ ரெல்லாம்!
தீதியற்றும் வல்லரவை இனங்காணும்
தெளிவின் றிக் கால மெல்லாம்
பேதைமையில் உழன்று ழன்று
[பிழைப்பதற்கும்
வழியின் றித் தவிப்ப தேனே?

மலர்ந்தனகாண் தமிழருக்கோர் மாநிலமென்
றெல்லோரும் மகிழும் வேளை
கலகங்கள் உருவெடுக்கத் தமிழிளைஞர்
களத்தினிலே மீண்டும் நிற்கப்
புலர்ந்தெழுந்த கதிரவனும் புன்மையிருள்
சிக்குண்டு புதைந்தாற் போல
நலனிழந்த தமிழரிடம் நடத்திவரும்
அறக்கேட்டைத் தடுப்பா ருண்டோ?

---

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறும். அதுவே வரலாறு உணர்த்தும் பாடமுமாகும். இல்லையென்றால் கொள்ளையடிப்பதும் கொலை செய்வதுந்தாம் விடுதலைப் போராட்டம் என்ற தவறான மரபைத் தோற்றுவித்து விடுமென்க. மேற்படி 'தமிழ்நில'த்தின் கருத்து தமிழன்பர்களிடையே அதிர்ச்சியையும் அருவருப்பையும் ஏற்படுத்தியுள்ளது. —நா தமிழவேள் —பழங்கரை

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 94. TN/MS (C) 657

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!
1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 13
மக்களை மதிக்காத அரசு
மக்களாலேயே வீழ்த்தப் பெறும்!

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

நூல் அஞ்சல்
பெறுநர்:
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5